**மொனராகலை பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

1. **நிதிக்கூற்றுக்கள்**

1.1 **நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 02 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 01 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஆகஸ்ட் 27 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 **அபிப்பிராயம்**

தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொனராகலை பிரதேச சபையின் நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 **நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

1.3.1 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான 02 தீயணைப்பு வாகனங்கள் மற்றும் கை டெக்ரர் என்பவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) போஹிட்டிய கனிஷ்ட வித்தியாலத்திற்கு நீரை வழங்குவதற்கான வேலைக்குச் செலுத்தப்பட்ட ரூபா 20,000 தொகையான முற்பணம் செலவினக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. பின்னர் வேலைகளுக்கான பணம் செலுத்தும் போது ரூபா 86,912 பெறுமதியில் அந்த அளவு கழிக்கப்படாமல் செலவினக் கணக்கின் வரவில் கணக்கு வைக்கப்பட்டமையினால் செலவினம் ரூபா 20,000 இனால் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்குரிய வேலைகளுக்காகச் செலுத்த வேண்டிய ரூபா 903,442 தொகையான செலவினத்திற்காக கடன்கொடுத்தோரின் கீழ் நிதிஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1.3.2 **இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

03 கணக்கு விடயங்களில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 29,123,324 ஆக இருந்ததுடன் மீதி உறுதிப்படுத்தல் மற்றும் உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் மீதி ரூபா 28,853,900 ஆக இருந்தது.

1.3.3 **பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

(அ)பல வருட காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற சபைக்கு அறவிட வேண்டிய ரூபா 5,965,164 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1989 மற்றும் 1990 ஆம் ஆண்டுகளில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு வழங்கப்பட்ட கடைகளுக்காகச் செலுத்த வேண்டிய ரூபா 4,872,912 தொகை கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதனைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 11,225,457 கூட்டுத்தொகையான 04 சொத்து விடயங்களையும், ரூபா 458,402 தொகையான பொறுப்பு விடயத்தையும், ரூபா 62,494 தொகையான வருமான விடயத்தையும் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | |
| (i) | 152 ஆம் பிரிவு | பல்வேறு கம்பனிகளினால் 2005 தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை நிர்மாணிக்கப்பட்ட 12 பரிவர்த்தனை சமிக்ஞைக் கோபுரங்களிலிருந்து வருடாந்த வாடகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 158 மற்றும் 159 ஆம் பிரிவுகள் | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 50,626,951 கூட்டுத்தொகையான நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) | 387 | மக்கள் வங்கியின் 068-100136752849 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கில் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 170,553 மேலதிகப் பற்று வசதி பெறப்பட்டிருந்தது. |
| (ii) | 571(3) | ரூபா 5,170,526 தொகையான காலாவதியான வைப்புக்களை ஒய்வுபெறச் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 880 | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்பு பெறப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,547,733 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 98,725 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வாடகை

மீளாய்வாண்டிற்காக 24 ஆம் இலக்க மாட்டிறைச்சிக் கடையை வாடகைக்கு விட்டவகையில் பாதுகாப்பு வைப்பாகக் கிடைக்க வேண்டிய ரூபா 165,955 தொகையும், நிலுவை வாடகை ரூபா 1,174,566 தொகையும் மற்றும் தாமதக் கட்டணம் ரூபா 2,992,961 தொகையும் உள்ளடக்கிய ரூபா 4,333,482 தொகையினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 ஏனைய வருமானம்

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் செயற்பாட்டிற்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்டுள்ள அல்லது அந்த அதிகார சபையில் அங்கீகரிக்கப்பட்ட பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற ஹொட்டேல் / மூன்று தங்குமிடங்களிலிருந்து அவ்வாறு கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் மோட்டார் கிரேடர் இயந்திரத்தை பத்து வெளிநபர்களுக்கு வாடகை அடிப்படையில் வழங்கியதற்காக அறவிட வேண்டிய ரூபா 423,153 தொகையினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்ற தண்டப்பணம் | 1,427,355 |
| முத்திரைக் கட்டணம் | 3,002,926 |

### 2.3 மிகை அறவீடு

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்புவாய்ந்தவர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகை அறவீடுகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 922,195 தொகை அறவிடவேண்டியிருந்தது.

**2.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

(அ) 2009 திசெம்பர் 22 ஆந் திகதி ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் உதவி இலக்கம் 2201 இன் கீழ் வீதி அபவிருத்தி செயற்திட்டத்திற்காக பெற்பட்ட ரூபா 12,985,982 கடன் பணத்திலிருந்து முன்னைய ஆண்டின் இறுதிக் காலாண்டிற்காகவும் மீளாய்வாண்டிற்காகவும் செலுத்த வேண்டிய ரூபா 2,478,853 கடன் தவணைப் பணம் செலுத்தப்பட்டிராததுடன் அதற்காக சபைக்கு ரூபா 81,802 தொகையான மேலதிக வட்டியைச் செலுத்த வேண்டி ஏற்பட்டது.

(ஆ) நீண்ட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்ட 03 வாகனங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமல் அலுவலக வளவில் பல்வேறு காலநிலைத் தாக்கங்களுக்கும் உட்படக்கூடிய வகையில் காணப்பட்டது.

**2.5 செயற்பாடற்ற கணக்கு**

மக்கள் வங்கியில் பேணப்பட்ட 176752844 ஆம் இலக்க வங்கிக் கணக்கு 2010 திசெம்பர் 01 ஆந் திகதி தொடக்கம் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 31,075 தொகையான மீதி காணப்பட்டது.

**2.6 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்ட பாதீட்டின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் ஆண்டின் உள்ளபடியான வருமானம், செலவினம் என்பவற்றிற்கிடையே காணப்படுகின்ற கவனத்திற் கொள்ளக்கூடிய முரண்களின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவினக் கட்டுப்பாட்டின் போது பாதீடு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்